கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

CC No.86 /2023

நாள். 22.03.2024

ம.சா.1 – திரு.கண்ணன்

த/பெ - திரு.நம்பி

எதிரி தாக்கல் செய்துள்ள மனு அனுமதித்தன் பேரில், சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, எதிரி தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1) நீங்கள் வட்டிக்கு கடன் பணம் கொடுப்பதற்கு அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெறவில்லை என்றால் சரிதான். நீங்கள் எதிரிக்கு நோட்டீஸ் அனுப்பினீர்களா என்றால் நோட்டீஸ் அனுப்பினேன். நீங்கள் ம.சா.ஆ.4 அறிவிப்பில் எந்த தேதியில், எந்த இடத்தில் பணம் கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால் ம.சா.ஆ.4 நோட்டீஸ் பற்றி தெரியாது. உங்களுக்கு எதிரி எந்த இடத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் 168, நாயக்கர் தெரு, வள்ளியூரில் குடியிருந்து வருகிறார். எதிரியானவர் மேற்படி முகவரியில் குடியிருக்கவில்லை. நீங்கள் வழக்கிற்காக பொய் சொல்கிறிர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் மேலே குறிப்பிட்ட முகவரிக்கு தான் நோட்டீஸ் அனுப்பினீர்கள் என்றால் ஆமாம், 168, நாயக்கர் தெரு, வள்ளியூருக்கு தான் அனுப்பினேன். முதல் தடவையாக நான் ம.சா.ஆ.1 டிஎம்.பி வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்தேன்.

2) முதல் தடவையாக நீங்கள் காசோலையை தாக்கல் செய்த போது ம.சா.ஆ.3 ல் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின் படி தான் திருப்பப்பட்டதா என்றால் எதிரியின் வங்கி கணக்கில் பணம் இல்லை என்று திருப்பப்பட்டது. முதல் தடவையாக காசோலை திருப்பப்பட்ட மெமோவானது உங்களிடம் தான் உள்ளதா என்றால் என்னிடம் வங்கி அலுவலர்கள் மெமோ கொடுக்கவில்லை, பணம் இல்லை என்று சொன்னார்கள்.

3) முதல்தடவையாக வங்கியில் ம.சா.ஆ.1 காசோலையை தாக்கல் செய்த போதே எதிரியின் கையொப்பமானது முரண்பாடாக உள்ளது என்ற காரணத்தினால் தான் திருப்பப்பட்டது என்றால் பணம் இல்லை என்று தான் வங்கி அலுவலர்கள் வாய்மொழியாக சொன்னார்கள். ரிட்டன் மெமோ கொடுக்கவில்லை. நீங்கங் வருமான வரி செலுத்தி வருகிறீர்களா என்றால் செலுத்தி வருகிறேன். நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக கூறும் ரூ.7,00,000/- உங்கள் வருமான வரி கணக்கில் துலங்குமா என்றால் துலங்காது.

4) உங்களுடைய வங்கி கணக்கும், எதிரியின் வங்கி கணக்கும் டி.எம்.பி வங்கி தான் என்றால் சரிதான். நீங்கள் எதிரிக்கு வங்கியின் மூலமாகவே பணம் அனுப்பியிருக்கலாம் என்றால் அனுப்பியிருக்கலாம் ஆனால் நான் அவ்வாறு அனுப்பவில்லை. காசோலை திருப்பப்பட்டது என்பது எதிரியின் கையொப்பம் இல்லை என்று தான் திருப்பப்பட்டதா என்றால் வங்கியில் எதிரியின் கையொப்பம்

மாறுப்பட்டுள்ளது என்பதன் அடிப்படையிலும், போதிய பணமில்லை என்பதின் அடிப்படையிலும் என்னிடம் மெமோ கொடுத்தார்கள். அதன் அடிப்படையில் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் எதிரியின் கையொப்பம் முரண்பாடாக இருப்பது சம்மந்தமாக காவல் துறையிடம் எதும் புகார் கொடுத்தீர்களா என்றால் இல்லை. காசோலையில் எழுதப்பட்ட கையெழுத்தும், கையொப்பமும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் எதிரி தான் காசோலை கொடுத்தார்.

5) எதிரிக்கு நீங்கள் இதற்கு முன்பாக பணம் கொடுத்து வாங்கியது இல்லை என்றால் சரிதான். உங்களுக்கு எதிரியானவர் வட்டி கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதை பொறுத்து ஏதாவது வழக்கு கொடுத்தீர்களா என்றால் இல்லை. ம.சா.ஆ.1 காசோலையானது உங்களிடம் எதிரி எந்த காலத்திலும் உங்களிடம் காசோலை கொடுக்கவில்லை என்றும், அதில் உள்ள கையொப்பம் மற்றும் கையெழுத்து எதிரியுடையது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

6) நீங்கள் மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் எதிரியானவர் எந்த காலத்திலும் பணம் கேட்டதும் கிடையாது நீங்களும் கொடுத்தது கிடையாது என்றால் சரியல்ல. அதனால் தான் நீங்கள் ம.சா.ஆ.4 அறிவிப்பில் எந்த தேதியில், எந்த இடத்தில் எதிரியானவர் கடன் வாங்கினார் என்றும், எதிரியானவர் எந்த தேதியில் காசோலை கொடுத்தார் என்றும் குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் உங்கள் நிரூபண வாக்குமூலத்தில் நீங்களும், எதிரியும் ஒரே ஊரைச் சார்ந்தவர்கள்

என்றும், உங்களிடையே நல்ல அறிமுகம் இருந்தது என்று கூறியுள்ளீர்கள், மேற்படி விபரங்களை உங்கள் புகாரிலும்,வழக்கறிஞர் அறிவிப்பிலும் கூறவில்லை என்றால் சரியல்ல.

7) நீங்கள் வட்டிக்கு கடன் கொடுத்ததாக உங்கள் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். தொலைந்து போன எதிரியின் காசோலையை நீங்கள் கண்டெடுத்து எதிரியின் கையொப்பத்தை இட்டு நீங்கள் காசோலையை நிரப்பி வசூலுக்காக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் அரசாங்கத்திற்கு செலுத்திய வருமான வரிக் கணக்கின் படி நீங்கள் எதிரிக்கு ரூ.7,00,000/- கொடுக்கமுடியாது என்றால் சரிதான். நீங்கள் வருமானவரியில் உண்மை கணக்கு விபரத்தை தான் கூறுவீர்கள் என்றால் சரிதான்.

8) பொதுவாக காசோலையில் கணக்குதாரரின் கையொப்பம் மாறுபாடாக இருந்தால் காசோலையை செலுத்தும் போது வங்கியில் பணம் கொடுக்கமாட்டார்கள் என்றால் எனக்கு தெரியும். நீங்கள் காக்கா டி.வி என்ற லோக்கல் சேனல் மற்றும் காக்கா ஸ்டுடியோ நடத்தி வருகிறீர்கள் என்று உங்களுடைய அறிவிப்பில் கூறவில்லை என்றால் சரிதான். எதிரி உங்களிடம் பணம் கேட்டதாகவோ, நீங்கள் காசோலையை கொடுத்து பணம் வாங்கி கொள்ளுமாறு கூறியதாகவோ, ஒரு சதவீதம் வட்டிக்கு கொடுத்ததாகவோ, வட்டி தரவில்லை என்ற விஷயத்தையோ நீங்கள் உங்களுடைய நோட்டீஸில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

9) எதிரியானவர் உங்களுக்கு சட்டப்படியாக பணம் எதுவும் கொடுக்க வேண்டிய அவசியம் கிடையாது என்றும், நீங்கள் உண்மைக்கு மாறாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் மனுவிலும், நோட்டீஸிலும் மற்றும் நிரூபண வாக்குமூலத்திலும் கூறப்பட்டுள்ளது உண்மையல்ல என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கு நீங்கள் ரூ.7,00,000/- கொடுப்பதற்கு பணவசதி கிடையாது என்றால் சரியல்ல. நீங்கள் உண்மைக்கு மாறாக எதிரியிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.